# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 04.02.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# அதிர்ந்தது தென்கிழக்கு



## விண்ணைத்தொடும் கோசங்களுடன் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் தாழங்குடாவில் நிறைவு

**(நமது நிருபர்கள்)**

பொத்துவில் இருந்து பொலிகண்டி வரையிலான போராட்டம் புதன்கிழமை(03) காலை 9 மணியளவில் கொட்டும் மழைக்கு மத்தியில் ஆரம்பமாகியது. இதில் சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள். மதத் தலைவர்கள், வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல தமிழ் அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்திய மக்கள் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனநாயக உரிமை தடுப்பதற்கு எந்த சட்டத்திலும் இடமில்லை

### பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன்





**(கனகராசா சரவணன் )**

எங்களுடைய ஜனநாயக உரிமை தடுப்பதற்கு எந்த சட்டத்திலும் இடமில்லை இருந்போதும் ஜனநாயகரீதியாக அகிம்சைவழியில் எவருக்;கும் பாதகமில்லாமல் வீதியில் நடக்கின்ற போது அதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## போராட்டத்திற்கு ஆதரவு

### இனவாதத்திற்கு எதிரானதும் ஜனநாயகத்திற்குமான மக்கள் அமைப்பு




ஒடுக்கும் ஒரு அரசாங்கத்திற்கு எதிராக மக்களும், அரசியல் பிரதிநிதிகளும் வீதியில் இறங்கி, வெகுஜன தளத்தில் தமது அடையாள

02 ஆம் பக்கத்தில்...

## மதங்களை மலினப்படுத்தும் நிலையில் உண்மையான சுதந்திரம் எமக்கேது?

### அசாத் சாலி கேள்வி



சுதந்திரத்தின் சுவாசக் காற்றை சகல சமூகங்களும் நுகரும் வரைக்கும், இன்றைய தினத்தின் யதார்த்தங்களை உணர்வதில், சிறுபான்மை சமூகங்கள் சிரமப்படுவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

சுதந்திர தினம் குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியுள்ளதாவது;

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் கடலிலும் குளத்திலும் மூழ்கி இருவர் பலி

**(ரக்ஸனா, ஏறாவூர் நிருபர் )**

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் இரு மீனவர்கள் கடலிலும் குளத்திலும் மூழ்கிப் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக ஏறாவூர் புன்னைக்குடா கடலில் மீன் பிடியில்

02 ஆம் பக்கத்தில்...

## டிப்பர் விபத்தில் சிக்கியவர் 8 நாட்களின் பின்னர் மரணம்!

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கடந்த 26 ஆம் திகதி டிப்பர் விபத்தில் சிக்கிய நபர் நேற்று (02) ம் திகதி மரணமடைந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

## போராட்டத்திற்கு அட்டாளைச்சேனையில் முழு ஆதரவு



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையிலான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அட்டாளைச் சேனையிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லிம்

02 ஆம் பக்கத்தில்...

## கவனஈர்ப்புப் பேரணியில் அ.இ.மக்கள் காங்கிரஸ் ஆதரவும் இணைவும்



**(ஏ.எல்.எம்.சலீம்)**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

**( கதிரவன்)**

காணாமல் ஆக்கப்பட்ட பலநூறு உறவுகளின் குழந்தைகள், உறவினர்கள் படும் வேதனை சுமந்த வாழ்வுக்கு விடிவேண்டும் என பல நாட்களாக நடாத்திவரும் போராட்டம் இன்று சகல பேதங்களுக்கும் அப்பால் மக்கள் ஜனநாயக எழுச்சிப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## கிழக்கு மாகாணத்தில் வகைப்படுத்தப்படாத குப்பைகளை மார்ச் முதலாம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளக்கூடாது

**(எப்.முபாரக்)**

கிழக்கு மாகாணத்தில் வகைப் படுத்தப்படாத குப்பைகளை மார்ச் முதலாம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளக் கூடாது என முடிவு செய்யப்பட்டதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் தலைமையில் கீழ் நேற்று நடைபெற்ற )விசேட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தை மாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கும் தெரிவிக்குமாறு

02 ஆம் பக்கத்தில்...








## மன்னார் நீதிமன்றில் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 3ம் திகதி தொடக்கம் 6ம் வரை 14 நபர்களுக்கு சட்டவிரோத செயல்பாட்டுக்கு தடை

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னாரில் பொதுத் தொல்லைகள், அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் செய்கின்ற அடிப்படையிலும் தற்பொழுது நிலவுகின்ற கொவிட் 19 தொடர்பாகவும் குறிப்பிட்டட 14 நபர்கள் இவற்றை மீறி செயல்படுவதை தடுத்து நிறுத்தக்கோரி மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் முன்னிலையில் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இரு பகுதினரின் சமர்பணத்தைத் தொடர்ந்து பொலிசாரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டு குறிப்பிடப்பட்ட நபர்களின் செயல் பாட்டுக்கு நீதவான் தடைவிதித்து உத்தரவு பிறப்பித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான...

முன்னைய ஆட்சிக்காலத்தில் அனாதை களாக்கப்பட்ட பள்ளிசெல் பிள்ளைகளின் உறவுகளை விடுவிக்குமாறு ஐந்து லட்சத்திற்கும் அதிகமான கையொப்பங்களைப் பெற்று உரிய தரப்பிடம் கையளித்தோம்.

இன்றுவரை அதற்கு தீர்வு கிடைக்கவில்லை. மாறாக ஆக்கிரமிப்புகளுள் அடக்குமுறைகளும் நீண்டு செல்கின்றது. இதற்கு தீர்வு வேண்டி இன்று மக்கள் எழுச்சிப்போராட்டமாக உருவெடுத்துள்ளது. இத்தகைய போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழு ஆதரவை வழங்கி நிற்கின்றது.

பிரிக்கப்படாத தொப்புழ் உறவோடு வாழும் எம்இனத்தின் துயரவாழ்விற்கு நீதி கிடைத்து எதிர்கால சந்ததியாவது நிம்மதியாக வாழ்வதற்கு வழியேற்பட வேண்டும். என்பதற்காக ஒட்டுமொத்த ஆசிரியச்சமூகமும் பூரணமான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் சரா புனேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை.

## மன்னார் நீதிமன்றில் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்...

நேற்று புதன் கிழமை (03.02.2021 மன்னார் பொலிசார் குற்றவியல் கோவை பிரிவு 98 இன் கீழும் அதாவது பொதுத் தொல்லை என்ற அடிப்படையிலும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் செய்கின்ற அடிப்படையில் குற்றிவியல் நடவடிக்கோவை 120 அடிப்டையிலும் தற்பொழுது நிலவுகின்ற கொவிட் 19 இன் தொடர்பான வர்த்தகமானி தொடர்பாகவும் இவற்றை 14 நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு மீறுவதாக கோரி எதிர்வரும் 3 ந் திகிதி முதல் எதிர்வரும் 6 ந் திகதி வரை எந்தவிதமான ஆர்பாட்டங்களோ அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்ற அடிப்படையில் இவர்களுக்கு தடை விதிக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்து பொலிசார் தங்கள் சமர்ப்பணத்தை மன்றில் சமர்பித்தனர்.

இதன்போது மன்னார் மன்றிலுள்ள பெரும்பாலான சட்டத்தரனிகள் இவ் வழக்கில் பொலிசாரின் நடவடிக்கைக்கு எதிராக மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இவ் வழக்கு தொடர்பாக மன்னார் சிரேஷ்ட பிரபல சட்டத்தரனியான பா.டெனிஸ்வரன் தனது நீண்ட சமர்பணத்தை மன்றில் முன்வைக்கையில்; பொதுத் தொல்லை என்ற அடிப்படையில் வழக்கு ஒன்று தாக்கல் செய்வதென்றால் பொதுத் தொல்லை ஒன்று இடம்பெற்றிருக்க வேண்டும்.

அதாவது போக்குவரத்துக்கு தடையாக அல்லது பொது பாதை போக்கவரத்துக்கு தடையாக பொது தொல்லை பொது மக்களுக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

இவ்வாறு இடம்பெற்றிருந்தால்தான் பொதுத் தொல்லைக்கு எதிரான செயல்பாடாக இருக்கும் என்ற வாதத்தை முன்வைத்தார். அத்துடன் அரசுக்கு எதிரான ஆர்பாட்டங்கள் கோஷங்கள் என்பவற்றை தடை செய்ய வேண்டும் என்ற கருத்தானது இலங்கையின் அரசியல் அமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது. குறிப்பாக அடிப்படை உரிமையிலுள்ள நடமாடும் சுதந்திரம் பேச்சு சுதந்திரம் கருத்துக்கள் வெளியிடுகின்ற சுதந்திரம் இவ்வாறான அடிப்படை உரிமைகளை தடைசெய்கின்ற விதமான பொலிசாரின் நடவடிக்கை காணப்படுகின்றது. இவ்வாறான செயல்பாட்டால் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதிப்படைகின்றது.

அத்துடன் இலங்கை அரசாங்கம் ஐசீசீஆர் என்ற பட்டயத்தில் காணப்படுகின்ற மனித உரிமை தொடர்பாக பின்உறுதிப்படுத்தியுள்ளது. அகவே இதில் இருக்கின்ற உரிமைகளை அனுபவிப்பதற்கான அனைத்து வசதிகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இது நீண்ட போராட்டத்திற்குப் பின்பாதிபடைந்துள்ள ஒரு சமூகம் தனது கருத்துக்களை அரசுக்கு சுட்டிக்காட்டுவதற்கும் சர்வதேச மட்டத்தில் எமது மக்கள் பாதிபடைந்து வருவதையும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கண்டறியும் பொருட்டும் இதற்கான ஒரு தீர்வினை பெறும்பொருட்டு மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிசார் தடுக்கக்கூடாது எனவும் இது ஒரு பாரிய ஜனநாயக மீறலாக காணப்படுகின்றது.

ஆகவே நாட்டிலுள்ள அரசியல் அமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. இருந்தும் பொது மக்களுக்கு பங்கம் விளைவிக்கப்படும்போது இவ்வாறான தடையை விதிக்க முடியும்.

ஆனால் இங்கு இவ்வாறான எந்தவிதமான குந்தங்களும் எம்மால் மேற்கொள்ளப் போவதில்லை.

நாட்டில் உள்ள கொவிட் 19 சுற்று நிருபங்கள் அமைவாக நாங்கள் நடந்து கொள்வதுடனே இருக்கின்றோம். சட்டம் ஒழுங்கு இவற்றை பாதுகாக்கும் பொலிசாரே அவற்றை மீறுகின்ற விதத்திலேயே பொலிசார் நடந்து கொள்ளுகின்றனர்.

இது பாதிக்க்பட்ட சமூகத்தை அடக்கி ஆளுகின்ற ஒரு நிலைபாடாக இது அமைகின்றது. ஆகவே இருவரின் சமர்பணத்தினை பிறிதொரு தினத்தில் இரு வாரத்துக்குப் பின் கட்டளைக்காக திகதியிடுமாறு மன்றில் கேட்டுக் கொள்கின்றேன் என சட்டத்தரனி பா.டெனிஸ்வரன் இவ்வாறு தனது சமர்பணத்தில் முன்வைத்தார்.

இதன்போது நீதிபதி அவர்கள் இவ் வழக்கை ஒத்திவைத்துவிட்டு பின் அரை மணி நேரம் கழித்து வந்து இது சம்பந்தமான தீர்ப்பை வழங்கினார். இதில் பொலிசார் விண்ணப்பித்தவாறு எதாவது சட்டவிதி முறைகளை மீறுகின்றவாறு இடம்பெறுமாகில் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும்

மக்கள் சட்டவிரோதமாக ஒன்றுகூடுதல் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் செய்வதை தடைசெய்யப்படுவதாக கட்டளை பிறப்பித்தார்.

மன்றில் சமர்பிக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு ஆரோக்கியநாதன் ஈசன், மதத்தலைவர் ஐயா ஸ்ரோம், வேலன், ஈ.சரவணபவன், க.சுபாஷ், மணிவண்ணன், சிவஞானம், சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜட, கனகராஜட. கனகரஞ்சன், சிவகரன், உதயசந்திரா, அ.சகாயம், ஆவர்.

## கிழக்கு மாகாணத்தில் வகைப்படுத்தப்படாத குப்பைகளை...

ஆளுநர் மாகாண சபைகளின் அமைச்சின் செயலாளர் யூ. எல்.ஏ அஸீஸுக்கு அறிவுறுத்தினார்.

உள்ளுராட்சி மன்றங்களால் வகைப்படுத்தப்படாத குப்பைகளை சேகரிப்பதன் காரணமாக மாகாணத்தில் பல சுகாதார பிரச்சினைகள் எழுந்துள்ளன

குப்பைகளை முறையாக வெளியேற்றாததால் காட்டு யானைகளின் பிரச்சினை அதிகரித்துள்ளமையும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே அழிந்து போகக் கூடிய மற்றும் அழியாத இரண்டையும் தனித்தனியாக சேகரிக்க உள்ளுராட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு உத்தரவிடுமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் இந்த முடிவுகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் ஆளுநர் மேலும் கூறினார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அமைச்சின் செயலாளர் மதானாயகே, மாகாணத்தின் உள்ளாட்சி நிர்வாக ஆணையர்கள் முதலமைச்சின் செயலாளர் யூ. எல்.ஏ அஸீஸ், உள்ளுராட்சி உதவி ஆணையர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் கடலிலும் குளத்திலும் மூழ்கி இருவர் பலி...

ஈடுபட்டிருந்த வேளையில் கடலில் வீசிய சூறைக்காற்றில் சிக்குண்டு ஒருவர் பலியாகியுள்ளார். தளவாய் கிராமத்தில் வசிக்கும் 4 பிள்ளைகளின் தந்தையான பொன்னையா கனகரெத்தினம் (வயது 54) என்பவரே பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மற்றொரு மீனவரான சீதேவிப்பிள்ளை கணேசன் என்பவர் கடலில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் வழமைபோன்று செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் கடலில் மீன் பிடிக்காகச் சென்றுள்ளனர். இவ்வாறு மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது செவ்வாய்கிழமை (02) இரவு 11 மணியளவில் திடீரென வீசிய சூறைக்காற்றினால் படகு கவிழ்ந்துள்ளது.

புதன்கிழமை காலையில் சடலமும் படகும் களுவன்கேணி துருப்புக்கேணி என்ற இடத்தில் கரை ஒதுங்கியிருந்ததாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டிய புத்தம்புரி குளத்தில் மூழ்கிய ஒருவரின் சடலம் புதன்கிழமை 03.02.2021 மீட்கப்பட்டதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடுமேய்க்கும் தொழிலாளியான பூபாலப்பிள்ளை புவனேந்திரன் (வயது 38) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் வீரபத்திரன் கோயில் வீதியை அண்டி வசிக்கும் புவனேந்திரன் தனது நண்பருடன் சேர்ந்து மீன்பிடிப்பதற்காக தோணியில் சென்றபோது தோணியில் இருந்து தவறி வீழ்ந்து குளத்தில் மூழ்கியுள்ளார். தேடுதலை மேற்கொண்டபொழுது சடலம் புதன்கிழமை புத்தம்புரி குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## போராட்டத்திற்கு ஆதரவு இனவாதத்திற்கு எதிரானதும்...

எதிர்ப்பினை காட்டுவதை இன்றைய அரசியல் சூழலில் இன்றியமையாத ஒரு ஜனநாயக முன்னெடுப்பாகவே நாங்கள் பார்க்கிறோம் என இனவாதத்திற்கு எதிரானதும் ஜனநாயகத்திற்குமான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மக்கள் போராட்டம் தொடர்பாக நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தென்னிலங்கையில் சிங்கள மக்களும், மாணவர்களும், தொழிற்சங்க அமைப்புகளும், அரசியல் கட்சிகளும், இன்றைய அரசாங்கத்திற்கு எதிராக , வெகுஜனத் தளத்தில் போராடியே வருகின்றனர். இன்றைய இனவாத மேலாதிக்க அரசாங்கத்தின் கபடத் திட்டங்களால் அண்மைக்காலமாக மிக மோசமாக, திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் அரசியல் , நிர்வாகம் மற்றும் நிலம் தொடர்பான விவகாரங்களுக்காகவும், நீண்டகாலமாக தமிழ் , முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்காகவும், அம்மக்களின் மீதான அரச , இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் , அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளால் இன்று தொடங்கப்பட்டுள்ள , இந்த ஜனநாயக வெகுஜனப் போராட்டத்திற்கு எமது தார்மீக ஆதரவையும் உறுதியான ஒருமைப்பாட்டையும் தெரிவிக்கிறோம்!

அரசபடைகளையும் , தமது கைபொம்மையான நீதித்துறையையும் வைத்து , இன்றைய இந்த சாத்வீக மக்கள் போராட்டத்தை ஒடுக்கி, தடுத்துவிட முயற்சிக்கும் இராணுவாத கோதா அரசாங்கத்தினை வன்மையாக கண்டிக்கிறோம்!

## ஜனநாயக உரிமை தடுப்பதற்கு எந்த சட்டத்திலும் இடமில்லை...

எதிராக அரச இயந்திரம் பொலிசார் ஊடாக தடை உத்தரவு பெறுகின்றது இதனை வன்மையாக கண்டிப்பதாக

பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்தார். தமிழ் இன அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான எழுச்சி பேரணி வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் புதன்கிழமை (03) பொத்துவில் ஆரம்பித்து மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் முடிவடைந்தது இதில் பற்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றை காரணமாக காட்டியும் சமூகங்களுக்கிடையே முறுகல்கள் ஏற்படும் என பொய்யாக சொல்லி அவர்கள் சில நீதிமன்ற தடை உத்தரவை பெற எத்தனிக்கின்றனர். இன்றைக்கு கோரோனா தொற்றால் மிக மேசமாக பாதிக்கப்பட்டது மேல்மாகாணம். அப்படி இருக்கத்தக்கதாக கொழும்பு துறைமுகத்தில் கிழக்குமுனை தொடர்பாக சில நாட்டகளாக பெரியதோரு ஆர்ப்பாட்டம் நடந்திருக்கின்றது அதிலே போய் கொரோனா வைரஸ் தொற்றைப்பற்றி எவரும் கவலைப்படவில்லை.

அரசாங்கமே முண்ணிண்டு தொழிற்சங்கங்களை ஏவிவிட்டு கிழக்கு முனையை இந்தியாவுக்கு கொடுப்பதை தடுக்கின்ற செயலை செய்யும் போது கொரோனா வைரஸ் பற்றி எவரும் கவலைப்படவில்லை எந்த பொலிசாரும் எந்த நீதிமன்றத்தையும் நாடவில்லை

ஆனால் எங்கள் அடிப்படை உரிமைகளை நாங்கள் பெறவேண்டும் என ஜனநாயக ரீதியாக அகிம்சைவழியில்; எவருக்;கும் பாதகமில்லாமல் வீதியில் நடக்கின்றபோது அதற்கு எதிராக அரச இயந்திரம் பொலிசார் ஊடாக தடை உத்தரவு பெறுகின்றது இதனை வன்மையாக கண்டிக்;கின்றோம்.

யாழ்ப்பாணத்திலும் நீதிமன்றங்களில் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளதாக அறிகின்றோம். எந்தெந்த எல்லைக்குள் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்படுகின்றதோ அதை அவருக்கு கொடுக்கப்பட்டால் நீதிமன்ற உத்தரவை மதிப்போம் அதை மீறமாட்டோம்.

தமிழ் பேசும் மக்களாக ஒன்றாக திரண்டு இன்று ஆரம்பம் முதல் நாள் மட்டும் தான் இது பெரும் திரட்சியாக வடக்கை நோக்கி போகும் போது எவராலும் அதை தடுக்க முடியாது. அதேவேளை விசேடமா சர்வதேசம் எங்களை திரும்பி பார்க்கவேண்டும் அவர்களை திரும்பி பார்க்க வைக்கவேண்டிய பெறுப்பு எங்களுக்கு இருக்கின்றது என்பதுடன் என்றுமே இல்லாதவாறு ஊடகவியலாளர்குளக்கு எதிராக தடைகளை எடுக்க அரசாங்கம் முனைகின்றது இது மிகவும் கண்டனத்துக்குரியது.

ஆகவே நாங்கள் முன்வைத்திருக்கின்ற எங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து நாளையும் இதே இடத்தில் இருந்து பேரணியை தொடருவோம் அனைவருடைய ஆதரவும் எங்களுக்கு தேவை என்றார்.




## மதங்களை மலினப்படுத்தும் நிலையில்...

அந்நிய அடக்கு முறைகளிலிருந்து தாய் நாட்டை விடுவிக்கும் சுதந்திர போராட்டத்தில் சிங்கள, இந்து, முஸ்லிம், கத்தோலிக்க தலைவர்கள் உழைத்த உண்மையை எவரும் மறைக்க முடியாது. ஆனால், அரசின் இன்றைய செயற்பாடுகள் இந்த உண்மைகளை மறைக்கும் வகையில் உள்ளமைதான் கடுங் கவலை.

அரசியல், சமூக, மத சுதந்திரங்கள் மாத்திரமன்றி இருப்புக்களை இழக்கும் சூழ்நிலையுமே இன்று சிறுபான்மை சமூகங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவை, ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நடந்தாலும் பரவாயில்லை. பழிவாங்கலுக்காக திட்டமிட்டு நடத்தப்படுவதுதான் கவலை.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் விதி முறைகளையும் மீறி, முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதும் மலினப்படுத்தும் மன நிலைகள்தான். இந்நிலையில், முஸ்லிம்களின் மனநிலை அரசுக்குச் சார்பாக எப்படித் திரும்புவது? விருப்பம் என்பது, பலாத்காரமாக திருப்பி வருவதல்ல. விளங்கி, புரிந்து ஏற்படுவதுதான் விருப்பமாகும்.

இந்த அரசாங்கத்தின் மன விகாரங்களை விளங்கியுள்ள முஸ்லிம்கள், சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் ஒதுங்கியிருப்பதே சிறந்தது. இவ்வாறு ஒதுங்கியிருந்தாலும் நமது நாட்டுப்பற்றுக்களை வேறு வடிவில் வெளிப்படுத்த தவறவிடக் கூடாது என்றும் அசாத்சாலி தெரிவித்துள்ளார்.

## டிப்பர் விபத்தில் சிக்கியவர் 8 நாட்களின் பின்னர்...

நாவலடி பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் மீது டிப்பர் வாகனம் மோதியதில் பலத்த காயங்களுடன் அந்நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

குறித்த விபத்தில் சிகிச்சை பெற்று வந்த வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளி குறுக்கு வீதியைச் சேர்ந்த 55 வயதுடைய அப்துல் சலாம் என்பவரே சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த நபருக்கு பீ.சீ.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பீ.சீ.ஆர்.முடிவு கிடைத்தவுடன் உடலை வைத்தியசாலை நிர்வாகம் ஒப்படைக்கும் என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## போராட்டத்திற்கு அட்டாளைச்சேனையில் முழு...

காங்கிரஸின் பிரதேச அமைப்பாளருமாகிய ஏ.எல்.எம். நஸீர் தலைமையில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர்..

போராட்டத்தில் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்..ஏ அன்சில், ஏ.எஸ்.எம் உவைஸ், தமின்ஆப்தின் உட்பட உலமாக்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அட்டாளச்சேனையில் இணைந்து கொண்ட இவர்கள் தென்கிழக்கு பல்கலைக் கழகம் வரை கோசங்களை எழுப்பியவாறு நடைபவணியாக சென்றனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜனஸா எரிப்புக்கு எதிராகவும், தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக நடைபெறும் அநிதிகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்தனர்.

## கவனஈர்ப்புப் பேரணியில் அ.இ.மக்கள் காங்கிரஸ்...

நேற்று புதன் கிழமை பல்வேறு பாதுகாப்புத் தரப்பினரின் கொடுபிடிகளுக்கு மத்தியிலும் வெற்றிகரமாக இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டிலும் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஒத்துழைப்புடனும் இடம்பெற்ற இந்த ஊர்வலம் பொத்துவிலிலிருந்து அக்கறைப்பற்று மட்டக்களப்பு பிரதான வீதி ஊடாக சென்ற போது பெருமளவிலான மக்கள் அதில் இணைந்து கொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர், பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் உட்பட அரசியல் பிரமுகர்கள் மற்றும் முக்கிய மதகுருமாரும் இக்கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

குறித்த ஊர்வலம் நிந்தவூரை வந்தடைந்த போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நிந்தவூர் மத்திய குழு உறுப்பினர்கள், மத்திய குழு தலைவரும் நிந்தவூர் பிரதேசசபை தவிசாளருமான எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் ஊர்வலத்தில் வந்தோரை வரவேற்றதுடன் தொடர்ந்து ஊர்வலத்திலும் இணைந்து கொண்ட அதேவேளை பெருமளவிலான நிந்தவூர் முஸ்லிம் மக்களும் இந்த ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர்.

உரிமைக்காய் குரல் கொடுப்போம் ஓரணியாய் அணிசேர்வோம் எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்த மாபெரும் கவனஈர்ப்பு பேரணியில் கலந்து கொண்டோர் பல்வேறு சுலோக அட்டைகளை ஏந்தி இருந்ததுடன் அவற்றை கோசமாகவும் எழுப்பினர்.

குறிப்பாக முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரியூட்டாதே! - எமது உணர்வு! உமது உரிமை! எனும் வாசகத்தைக் கொண்ட சுலோக அட்டைகளும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிர்ந்தது தென்கிழக்கு

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், தமிழ் தேசிய கட்சிகளின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் இந்த தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் பௌத்தமயமாக்கல், தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு, அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் சம்பளம், முஸ்லிம்களின் உடல்கள் தகனம் அடங்கலாக அரச அடக்குமுறைகள் போன்ற விடயங்களை முன்னிறுத்தி அவற்றை கண்டித்தும், நீதி கோரியும், தீர்வு கோட்டும் இந்த போராட்டம் திட்டமிடப்பட்டது.

முன்னதாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்கள் ஊடாக இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளும் மக்கள் பிரதிநிதிகளுக்கும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் நீதிமன்றத் தடை உத்தரவு பொலிசார் மூலம் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு பொலிஸ் உத்தரவையும் தாண்டி புதன்கிழமை இப்போராட்டம் மிகவும் வெற்றிகரமாக மட்டக்களப்பு தாழங்குடாவில் புதன்கிழமை மாலை நிறைவு பெற்றது. வியாழக்கிழமை காலை அவ்விடத்திலிருந்து மீண்டும் பொலிகண்டி நோக்கி புறப்படவுள்ளது. இந்நிலையில தமிழ் மக்களின் இப்போராட்டத்தில் முஸ்லிம் அரசியல் பிரமுகர்களும், முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டு வலுச்சேத்திருந்தனர்.

பொத்துவில் இருந்து மட்டக்களப்பு வரையில் பிரதான நெடுஞ்சாலையூடாக வந்த இப்பேரணியையடுத்து வீதியில் பொலிசார், இராணுவதினர், மற்றும் விசேட அதிரடிப் படையினரும், புலனாய்வுத் துறையினரும் தமது கடமையினை முடுக்குவிடப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண இளைஞர் பயிற்சி நிலையங்களுக்கு NVQ இறுதிப் பரீட்சை தொடர்பான வேலைத்திட்டம்

**(சாய்ந்தமருது)**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற இளைஞர் பயிற்சி நிலையங்களுக்கான NVQ இறுதி பரீட்சைக்காக online மூலம் தகவல்களை உள்ளிருக்கும் முறை தொடர்பான தெளிவூட்டும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட புதுக்குடியிருப்பு இளைஞர் பயிற்சி நிலையத்தில் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.வீ.சரத் சந்திரபால தலைமையில் நடைபெற்றது.

இவ் வேலைத்திடத்திற்கு பரிட்சை மட்டும் மதிப்பீட்டுப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் சந்தன உயன்கொட, பரீட்சை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு உதவிப் பணிப்பாளர் டி.குணசிரி மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஆலித்தீன் ஹமீர் மற்றும் கிழக்கு மாகாண நிர்வாக உத்தியோகத்தர் பீ.தியாகராஜா மற்றும் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இவ் வேலைத்திட்டதிற்கு கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற அம்பாறை, சாய்ந்தமருது, பதியதலாவ, தெஹியத்தக்கண்டிய, புதுக்குடியிருப்பு, திருகோணமலை கந்தளாய் ஆகிய இளைஞர் பயிற்சி நிலையங்களிலிருந்தும் நிலைய பொறுப்பதிகாரிகள், அலுவலக முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் போதனாசிரியர்கள் பங்குபற்றினர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் மீங்கி பாடநெறி கற்கின்ற பயிற்சியாளர்களின் மீங்கி க்கு முன் பின் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை 2020 ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து online முறை ஊடாக விண்ணப்பிப்பதற்கு கூங உஇ நிறுவனம் ஊடாக புதியதோர் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த முறையுடாக மிகவும் துரித முறையில் பயிற்சிக் குழுக்களுக்காக மதிப்பீட்டாளர்களை அடையாளம் காணக்கூடியவாறு இருக்கும்.

அந்த முறையை துரிதப்படுத்துவதற்கு





பயிற்சி நிலையம் ஊடாக கூஙஉஇ வலையமைப்புக்கு பயிற்சி நெறிமுறை மற்றும் பயிற்சியாளர்களின் தகவல்களை உட்படுத்தும்போது சரியான மற்றும் சீரான வழிமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளதால் அதற்காக மேலதிக அறிவினை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இவ் வேலைத்திட்டம் மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

## 33 பாடசாலைகளை கொண்ட காத்தான்குடி பிரதேச கல்வி அலுவலகத்திற்கு நிரந்தர கட்டிடம் பெற்றுத்தரப்பட வேண்டும்

### தவிசாளர் அஸ்பரிடம் சபை உறுப்பினர் டீன் பைரூஸ் வேண்கோள்

**(பழுலுல்லாஹ் பர்ஹான்)**

33 பாடசாலைகளையும் 14000 மேற்பட்ட மாணவர்களையும் 600 மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்ட காத்தான்குடி பிரதேச கல்வி அலுவலகத்திற்கு நிரந்தர கட்டிடம் பெற்றுத்தரப்பட வேண்டும் என காத்தான்குடி நகரசபை உறுப்பினர் ஊடகவியலாளர் ஏ.எல்.டீன் பைரூஸ் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

கடந்த 29 வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காத்தான்குடி நகர சபையின் 34 வது சபை அமர்வின்போது காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பரிடம் எழுத்து மூலம் கோரிக்கை கடிதம் ஒன்றை கையளிக்கையிலே மேற்படி விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த எழுத்து மூலம் கோரிக்கை கடிதம் தொடர்பில் நகரசபை உறுப்பினர் டீன் பைரூஸ் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் காத்தான்குடி பிரதேச கல்



விப் பணிமனைக்கான நிரந்தர கட்டிடம் ஒன்று இதுவரை இல்லாதிருப்பது மிகவும் கவலையான விடயமெனவும் காத்தான்குடி கோட்டத்தினைப் பொருத்தமட்டில் 33 பாடசாலைகள், 14000 க்கும் மேற்பட்ட மாணவர்கள், 600க்கும் அதிகமான ஆசிரியர்கள் என இருக்கின்ற நிலையில் இதன் தேவைப்பாடு எந்தளவு அவசியம் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒரு சமூகத்தின் அழியாப்பெரும் சொத்தானது கல்விதான் கல்வியைப் பற்றி பேசுகின்ற நாம் எமது பிரதேசத்தில் ஒரு நிரந்தரமான பிரதேச கல்வி அலுவலகம் ஒன்று இல்லாதிருப்பது பற்றி பேச,அதனை பெற்றுக்கொடுக்க மறந்து விட்டோம் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

காத்தான்குடி பிரதேச கல்வி அலுவலகமானது இன்று வேறு ஒரு கட்டிடத்தில் அடிப்படை வசதிகள் இன்றி தற்காலிகமாக இயங்கி வருகின்றது எனவே எமது பிரதேச மற்றும் மாணவ சமூகத்தின் எதிர்கால நலன் கருதி காத்தான்குடிக்கான புதிய பிரதேச கல்வி அலுவலகம் ஒன்றினை 2021 இவ்வாண்டிக்குள் பெற்றுத்தர வேண்டும் என்பதுடன் அதற்காக வேண்டி அரச காணி ஒன்று இனம் காணப்பட்டு, அதில் சகல வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.













# கொரோனாவிற்கு மத்தியில் கிழக்கின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும்

## அறிவுப் பரிமாற்றம் அவசியமென்கிறார் மாகாண பிரதிகல்விப் பணிப்பாளர் ஜவாட்





( வி.ரி.சகாதேவராஜா)

கொரோனா இன்று, நாளை ஒழியும் என்று சொல்லமுடியாது. எனவே அதனையும் எதிர்கொண்டு கிழக்கின் கல்வித்தரத்தை உயர்த்த கல்விசார் சமுகம் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் சிரேஸ்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எம்.ஜவாட் தெரிவித்தார்.

கிழக்குமாகாணத்தில் க.பொ.த. சாத பரீட்சையில் குறைந்த சித்திகளைப்பெற்ற பாடசாலைகளின்தரத்தை உயர்த்தும்வகையில் வலயம்தோறும் சென்று அத்தகைய குறைவான பாடசாலைகளின் கல்விச்சமுகத்தை சந்தித்து ஆய்வுசெய்து பின்னூட்டல்செய்து, முன்னேற்றும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக நேற்று மாகாணமட்டக்குழு சம்மாந்துறை வலயத்திற்கு விஜயம் செய்தது.

அதற்குத்தலைமைதாங்கி வந்த பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஜவாட் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.சஹதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்விசார் அதிகாரிகளுடனான சந்திப்பு பணிமனையில் நேற்று நடைபெற்றது.

முன்னதாக வலயத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் எ.எம்.நௌசாட் காணொளி மூலம் சமர்ப்பணம் செய்தார். அது வருகைதந்த அதிகாரிகளாலும் பலராலும் பாராட்டப்பட்டது.

தொடர்ச்சியாக கிழக்குமாகாண கல்வித்திணைக்கள் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆர்.நிமலரஞ்சன் ZERO FAIL என்ற திட்டத்தைமுன்வைத்து கருத்துரைவழங்கினார்.

அங்கு பணிப்பாளர் ஜவாட் மேலும் பேசுகையில்:

அறிவுமுகாமைத்துவம் செய்யும் காலத்தில் வாழும் நாம் எமக்கிடையே அறிவுப்பரிமாற்றம் செய்யவேண்டும். அதற்காகவே நாம் வலயம்தோறும் சென்று அடைவுமட்டத்தை அதிகரிப்பதில்உள்ள சவால்களை இனங்கண்டு, ஆலோசனைசெய்துவருகின்றோம்.

ஆங்கித்தில் பெயில்(FAIL) என்றால் நாம் தோல்வி என்கிறோம். உண்மையில் அதனை மறுதலையாக எடுத்தால் FIRST ATTEMPT IN LEARNING எனலாம்.

சில பாடங்களில் பெறுபேறு குறைவென்றால் அதற்கான மூலகாரணத்தை அறிந்து காரணகாரிய அடிப்படையில் செயலாற்றினால் வெற்றியடையலாம் என்றார்.

# ஓய்வுபெறும் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளருக்கு பாராட்டு விழா



(எஸ்.சபேசன்)

தனது 36 வருட கல்விச்சேவையில் இருந்து செவ்வாய்க்கிழமை ஓய்வு பெற்றுச்சென்ற சம்மாந்துறை ஆசிரிய மத்தியநிலைய முகாமையாளர் கி.செல்வராசா அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் தலைமையில் இடம்பெற்றபோது.

அவருக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார் இந்நிகழ்வில் அவரது பாரியார் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மகாலெட்சுமி செல்வராசா மற்றும் வலயத்தில் உள்ள பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு.அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை



(ரீ.எல.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நிலவும் குறைபாடுகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக ஆராயவென இராஜாங்க அமைச்சர் எஸ் .வியாழேந்திரன் அரசினர் ஆசிரியர் கலாசாலைக்கு நேற்று முன்தினம்விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் எம் .சி .ஜுனைட் அழைப்பின் பேரில் அரசினர் ஆசிரியர் கலாசாலைக்கு விஜயத்தை மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் எஸ் .வியாழேந்திரன் கலாசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாக அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபரிடம் கலந்துரையாடப்பட்டது.

இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து கலாசாலை கட்ட தொகுதிகள் மற்றும் கலாசாலை வளாகத்தை பார்வையிட்டார்.

இக்கலாசாலையில் 388 மாணவர்கள் ஆசிசரியர் பயிற்சியினை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பிரதேசத்திற்கு ஒரு தனியான வலயக்கல்வி அலுவலகம் தேவை



(எப்.முபாரக்)

தம்பலகாமம் பிரதேசத்திற்கு ஒரு தனியான வலயக்கல்வி அலுவலகம் தேவை என தேசிய விடுதலை மக்கள் முண்ணனியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் நேற்று தெரிவித்தார்.

தம்பலகாமம் பிரதேசம் திருகோணமலை மாவட்டத்தில் மூன்று தேர்தல் தொகுதிகளை இணைக்கும் ஒரே ஒரு பிரதேசமாக இருக்கின்றது.

அதில் ஒரு குறுகிய வித்தியாசத்தில் சம நிலையில் மூவின மக்கள் வாழும் பிரதேசமாக காணப்படுவதோடு இதில் இருந்து இந்த மூவின மக்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி உயர்வடைந்து வரும் கணிப்பீடுகளும் வருடா வருடம் காட்டிக்கொண்டுள்ள காலகட்டத்தில் இங்கு சுமார் சுமார் 30 மேற்பட்ட பாடசாலைகள் காணப்படுகின்றன, அதில் முஸ்லிம் பாடசாலைகளின் அலுவலக விடயம் கிண்ணியாவும், தமிழ் பாடசாலைகளின் அலுவலக விடயம் திருகோணமலைக்கும், சிங்கள பாடசாலை அலுவலக நடவடிக்கை கந்தளாய்க்கும் என பிரிக்கப்பட்டு இம் மூன்று இன பாடசாலை அலுவலக விடயம் சிரமமாக்கப்பட்டுள்ளது மிகவும் கவலைக்குரிய விடயம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகவே தம்பலகாமம் பிரதேசத்துக்கு ஒரு தனி வலயக்கல்வி அலுவலகம் ஒன்று தனியாக இயங்க வேண்டிய தேவைப்பாடு அவசியம். இது சம்பந்தமாக விரைவில் தரவுகள் திரட்டி தொகுத்து நேரடியாக கல்வி அமைச்சரை சந்தித்து பேசகூடி ஏற்பாடுகளை எமது கட்சி நடவடிக்கைகளை செய்து வருகிறோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்

கல்வி வலயத்தின் தேவைப்பாடுகள் குறித்தான தகவல்கள் இருப்பின் தமக்கு தெரியப்படுத்துமாறு கல்வி அதிகாரிகளிடம் கோரியுள்ளதாகவும் தேசிய விடுதலை மக்கள் முண்ணனியின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# உடல், உள ஆரோக்கியத்திற்காக யோகாசன பயிற்சி

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் பங்கேற்பு




( வி.ரி.சகாதேவராஜா)

உடல், உள ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக ஊழியர்களுக்கு ,சுழற்சி முறையில் யோகாசன பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஓய்வு நிலை அதிபரும் யோகாசன ஆசானுமாகிய யோக ஆச்சாரியார் கே.சந்திரலிங்கம் அவர்களினால் ஊழியர்களுக்கு இந்த யோகாசன பயிற்சிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜின் தலைமையில் நடைபெற்ற வகுப்புக்களை ஆரம்பிக்கும் நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கலந்துகொண்டு சிறப்பித்ததார்.

முதற் கட்ட பயிற்சி வகுப்பில் பிரதேச செயலாளர் அதியசயராஜ் உட்பட பல ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

வாரத்தில் மூன்று நாட்கள் இடம்பெறும் இந்த யோகக்கலை வகுப்புககள் சேனைக்குடியிருப்பில் அமைந்துள்ள விதாதா வள நிலைய கட்டிடத்தில் நடைபெறுகின்றது.

# சுதந்திர தினத்தில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்படல் வேண்டும் பிரஜைகள் குழு வேண்டுகோள்

( வாஸ் கூஞ்ஞ)

இலங்கையின் சுதந்திரத் தினத்தன்று தேசியக்கீதத்தையும் இணைத்து பாடப்படும்போது தலைதூக்கி வரும் இனப்பிரச்சனைக்கு இதுவும் ஒரு தீர்வாக அமைய ஏதுவாகும் என மன்னார் பிரஜைகள் குழு தனது ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

மன்னார் பிரஜைகள் குழு புதன்கிழமை ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில்

பெப்ரவாரி 4ஆம் திகதி சுதந்திர தினத்தன்று தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட மாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததனை மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு வன்மையாக கண்டிக்கின்றது.

சிங்கள மொழியைப் போன்று தமிழ் மொழியும் அரசகரும மொழியாக இருக்கின்ற படியினால் தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தினைப் பாடுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஆகிய நாம் வலியுறுத்துகின்றோம்.

இது தமிழ் மொழியிலும் பாடப்படும் போது இனப்பிரச்சனைக்குரிய தீர்வுக்கான ஒரு வழியாக அமையும் என்று நம்புகின்றோம். இல்லையேல் இது இனப்பிரச்சனை தீர்வுக்கான வழியினை அடைக்கும் செயலாகவே அமையும் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றோம் என இவ்வாறு தெரிவித்துள்ளது.

# சீரற்ற காலநிலையால் மட்டு. மாவட்டத்தில் பாரிய கடல் கொந்தழிப்பு

## மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதம்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கடுமையான கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதுடன் கடுமையான காற்றும் வீசிவருகின்றது. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் மீன்பிடி நடவடிக்கைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக புதிய காத்தான்குடி ஏத்துக்கால் பூநொச்சிமுனை நாவலடி வாகரை உட்பட பல மீன்பிடி பிரதேசங்களில் இக்கடல் கொந்தளிப்பு காணப்படுகின்றது.

கடல் காந்தளிப்பு காரணமாக மீனவர்கள் மீன்பிடி நடிவடிக்கைகளிலருந்து விலகியிருக்குமாறு மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்தும் கடல் கொந்தளிப்பாக காணப்படுமென மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி எஸ்..ரமேஸ் தெரிவித்தார்.

இதனால் மீனவர்கள் தங்களது படகுகளையும் மீன்பிடி கலன்களையும் கரையிலிருந்து நீண்ட தூரத்தில் நிறுத்தியுள்ளனர்.



இம் மாவட்டத்தில் சுமார் 26 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கின் பல்வேறு அபிவிருத்திகள் தொடர்பில் கருணா அம்மான் மேற்கொண்ட நடவடிக்கைகள்





(ரக்ஸனா)

வடக்கு கிழக்கின் பல்வேறு அபிவிருத்திகள் தொடர்பில் கருணா அம்மான் அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.

பிரதம மந்திரி அவர்களின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்கள் (கருணா அம்மான்) அவர்கள் செவ்வாய்கிழமைகல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்துவது சம்பந்தமாக துறைசார்ந்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ அவர்களை சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது மிகவும் பொறுப்புடன் அதனை கவனத்தில் எடுத்து உரிய அதிரிகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர் பணித்துள்ளார். அந்தவகையில் உடனடியாக எல்லை நிர்ணய குழுவை அனுப்புவதாக அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிக்கும்படி கருணா அம்மான் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதையும் நிவர்த்தி செய்வதாக அமைச்சர் வாக்குறுதி வழங்கினார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் அவர்களும் கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருவோம் என தெரிவித்திருந்தனர். ஆகவே இதற்கான சகல ஆவணங்களும் அமைச்சரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

கருணாம்மான் அவர்கள் கடந்த காலத்தில் அமைச்சராக இருந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தின் கித்துள் மற்றும் உறுகாம குளங்களை இணைப்பு செய்யும் விடயமும் இதன்போது அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கான ஆவணங்களும், அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இதற்கான நிதியை கடந்த காலத்தில் பிரான்ஸ் அரசாங்கத்திடம் இருந்து பெறுவதாக திட்டம் இடப்பட்டிருந்தது கடந்த மைத்தரி, ரணில் அரசாங்கத்தின் மந்தநிலை காரணமாக முன்னெடுக்க முடியது இருந்தது. என அமைச்சரின் கவனத்திற்கு கருணா அம்மான் கொண்டு சென்றதையடுத்து, அமைச்சர் அவ்விடத்திலேயே கருணாம்மான் முன்னிலையில் வைத்து ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடி அத்திட்டத்திற்கான நிதியை பெற்றுதருவதாக கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே புதிதாக அமைக்கப்படுகின்ற கச்சேரிக்குரிய கட்டடம் இதுவரையில் முடிவுறா நிலையில் இருக்கின்றது அந்த கட்டிட தொகுதியினையும் விரைவில் கட்டி முடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இதன்போத கருனா அம்மானிடம் உறுதியளித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க கடந்த ஒரு வாரமாக தலைநகரிலே நின்று நான் பல அமைச்சர்களைச் சந்தித்து, தேர்தல் காலத்தில் எம்மால் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அனைத்து வேலைத் திட்டங்களையும் நான் முன்நெடுத்திருக்கின்றேன் என பிரதமரின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்குரிய இணைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். இவ்விடையம் தொடர்பில் அவர் மேலும் தெரிவவருவதாவது.

அம்பாறை மாவட்டத்தில் பனம்பொருள் ஊடாக சுமார் 300 குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் வழங்குதல், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்துதல், கிட்டங்கி பாலத்தின் அபிவிருத்தி, கிரான் பாலம் அமைத்தல், மட்டக்களப்பு மாவட்டத்தின் கித்தூள் உறுகாமம் குளங்களை இணைத்தல், மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய கச்சேரிக்கு நிருமாணிக்கப்பட்டுவரும் புதிய கட்டட வேலைகளை துரிதப்படுத்தல், விளையாட்டு மைதானங்களைப் புணரமைப்புக்கு 300 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்தல், வைத்தியசாலைகளின் புணரமைப்பு, வீதி அபிவிருத்திகள், சதொசவினை விஸ்தரித்தல், இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்பு, தொடர்பில் துறைசார்ந்த அமைச்சர்களுடனும், கிழக்குப் பல்கலைக் கழகத்தை இந்தியாவிலிருக்கின்ற சிறந்த ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைத்துச் செயற்படுவது தொடர்பிலும், இந்திய நிதி ஒதுக்கீடுகளை வடக்கு கிழக்கில் அவிவருத்தி செய்தல், முன்னாள் போராளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்தாதாரம், தொடர்பில் இந்திய துணைத்தூதுவரிடமும் எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

தற்போதுதான் வடக்கு கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குரிய காலம் கனிந்துள்ளது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அனைத்து முஸ்லிம்களும் தங்களது ஆதரவுகளை வழங்க வேண்டும்



(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக வியாழக்கிழமை ஆரம்பமாகும் இரண்டாம் நாள் போராட்டத்திற்கு அனைத்து முஸ்லிம்களும் தங்களது ஆதரவுகளை வழங்க வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தவிசாளருமாகிய எம்.எஸ். எஸ்.அமீர் அலி அழைப்பு விடுத்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்திற்கு முஸ்லீம் சமுகமும் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஊடக அறிக்கையை விடுத்துள்ள போதே அவர் மேற்சொன்னவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர்; மேலும் தெரிவித்துள்ளதாவது;

வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெறும் பௌத்த மயமாக்கல் நிலங்கள் அபகரிப்பு, கொரோனாவினால் மரணமடையும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்வதற்கு எதிர்ப்பு, தமிழ் அரசியல் கைதிகளைவிடுதலை செய்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் சம்பளப் பிரச்சினை அடங்கலாக அரச அடக்குமுறைகள் போன்ற விடயங்களை முன்னிறுத்தி அவற்றை கண்டித்தும் நீதி கோரியும் தீர்வு கோட்டும் இந்த போராட்டம் திட்டமிடப்பட்டு நடைபெருகின்றது.

எனவே இதற்கு எமது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இதில் கலந்து கொள்ள வேண்டும் குறிப்பாக நாளை மட்டக்களப்பு தாளங்குடாவில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி காத்தான்கடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசத்தினால் வருகை தரும் போது முஸ்லிம்களும் தங்களது ஆதரவினை தெரிவிக்க வேண்டும் என்றும் இது சிறுபான்மை சமூகத்திற்கான உரிமைக்கான போராட்டம் அனைவரும் இன ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று தெரிவிததுள்ளார்.

## மன்னார் கிராம அலுவலரின்

# கொலை வழக்கு ஒத்திவைப்பு

( வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாந்தை மேற்கு பகுதியில் கிராம அலுவலகரின் கொலை வழக்கானது நேற்று புதன் கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டபோது கொலை தொடர்பான தடயப் பொருட்களின் பகுப்பாய்வு மன்றுக்கு கிடைக்கப் பெறாமையால் இவ் வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகவும் இலுப்பைக்கடவை கிராம அலுவலகராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் எஸ்.விஜேயேந்திரன் (வயது 55) என்பவர் கடந்த 03.11.2020 அன்று இரவு இவர் தனது கடமையை முடித்துக் கொண்டு தனது வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தவேளையில் இனம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ் கொலை தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் நிமித்தம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தற்பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இவ் கொலை தொடர்பாக மேலும் துப்புத்துலங்கி மன்றுக்கு அறிக்கையிடுமாறு குற்றப்புலணாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இவ் வழக்கு விசாரனை மீண்டும் புதன் கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜட முன்னிலையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டது.

இவ் வழக்கு தொடர்பாக கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த குற்றபுலணாய்வு திணைக்களத்திலிருந்து ஒரு அதிகாரியும் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரனி எஸ்.டினேஸ் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இவ் கொலை தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட தடயப் பொருட்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளபோதும் அவைகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லையென நீதமன்றில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் வழக்கை மீண்டும் எதிர்வரும் 17.02.2021 வரை நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

கொரோனா காரணமாக சந்தேக நபர் இவ் வழக்கின்போது சிறை அதிகாரிகளால் மன்றில் முன்னிலைப்படுத்தவில்லை. இவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு

# இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி வகுப்பு ஆரம்பம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் பொது நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 இற்கு அமைய அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற மத்திய தர ( மட்டம் - 2 ) உத்தியோகத்தர்களுக்கான 150 மணித்தியாலங்களை கொண்ட 18 நாட்கள் நடைபெறும் இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி வகுப்புக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

இப் பயிற்சி வகுப்புக்களின் 2 ஆவது பயிற்சி வகுப்பானது அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திரு. கே. கருணாகரனின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட செயலாளர் திரு. ஏ. நவேஸ்வரன் தலைமையில் இன்று (03) மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பயிற்சி வகுப்பில் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பணியாற்றி வருகின்ற மத்திய தர ( மட்டம் - 2 ) உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டு வருகின்றனர். தேசிய இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் சிங்கள மொழி முலம் வேலைகளை திறம்பட மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே இப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏனைய அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந் நிகழவில் கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத், பிரதம முகாமைத்துவ உதவியாளர் (உதவி மாவட்ட செயலாளர் பிரிவு) எஸ். ஏ. மொஹமட் றிலா, தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் வீ. சந்திரகுமார், வளவாளர்களான திருமதி. தனலட்சுமி தர்மராஜா, திரு. என். துஜோகாந் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



சுபீட்சம்
நிமிர்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
கிழக்குச் சூரியன்
04 FEBRUARY 2021, WEDNESDAY

# கல்முனையில் அனைத்து நிறுவனங்கள், வீடுகளிலும் தேசிய கொடியை பறக்க விடுமாறு மாநகர முதல்வர் வேண்டுகோள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 73ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், கடைகள் மற்றும் வீடுகளில் தேசியக் கொடியை பறக்க விடுமாறு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது தேசப்பற்றையும் ஒற்றுமையையும் பறைசாற்றும் வகையில் நாம் அனைவரும் தேசியக் கொடியை பறக்க விட வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வோம். ஏனெனில் அரசு வேறு, அரசாங்கம் வேறு, அரசு என்பதும் அரசாங்கம் என்பதும் வெவ்வேறானவையாகும். அரசாங்கமானது காலத்திற்கு காலம் மாறக்கூடியதாகும். அரசு என்பது நிலையான இருப்பும் இறைமை கொண்டதுமாகும்.



இன, மத, கலாசார, மொழி வேறுபாடுகளைக் கடந்து, நாட்டுப் பிரஜைகளை ஒன்றிணைப்பது அரசாகும். இந்த அரசு என்பது அரசாங்கத்தில் நின்றும் வேறானது என்பதை நாங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் இந்த நாட்டின் சுதந்திரம் என்பது குடியரசின் சுதந்திரமாகும். குடியரசின் சுதந்திரம் என்பது நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜையினதும் சுதந்திரம் என்பதை நாங்கள் உணர வேண்டும். அரசுக்கு மதிப்பளிப்பதும் கௌரவிப்பதும் நாட்டுப் பிரஜைகள் அனைவர் மீதும் கடமையான ஒன்றாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டதே தேசப்பற்றாகும். தேசியக் கொடியின் கீழ் ஒன்றிணைவதன் மூலமே இதனை வெளிப்படுத்த முடியும்.

இதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியையும் பொருளாதாரத்தையும் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் நாட்டின் சுதந்திரத்தையும் விடுதலையையும் அனைவரும் கொண்டாடுவோம்.

ஆகையினால் இந்த கொள்கை, கோட்பாட்டின் அடிப்படையில் கல்முனை மாநகர சபை எல்லைக்குள் வாழ்கின்ற அனைத்துப் பிரஜைகளும் தமது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளிலும் தேசியக் கொடியை பறக்க விடுமாறு மிகவும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்- என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஆலையடிவேம்பு பிரதேச பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை



(வி.சுகிர்தகுமார்)

அரச தொழிலில் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முன்னதாக பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும்போது தவறவிடப்பட்டவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் இரண்டாம் கட்டமாக இணைத்துக்கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை நேற்று இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரனின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இந்நேர்முகப்பரீட்சை உதவிப்பிரதேச செயலாளர் ஆர். சுபாகர் தலைமையில் மேலதிக மாவட்ட பதிவாளர் எம்.பிரதீப் மற்றும் சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பி. ரவிச்சந்திரன் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்நேர்முகப்பரீட்சையில் பட்டதாரிகளின் கல்வி சான்றிதழ் மற்றும் பட்டப்படிப்பு சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதுடன் விரைவில் இவர்களுக்கான நியமனங்களும் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை பறக்கத் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வு

(பி.எம்.எம்.ஏ.காதர்)

இலங்கையின் 73வது சுதந்திர தினத்தையொட்டி மருதமுனை பறக்கத் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள சுதந்திர தின நிகழ்வு இன்று (04-02-2021)காலை 9.00மணிக்கு மருதமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள நிறுவனத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.

சுகாதார நடைமுறைகளைப் பேணி நிறுவனத்தின் நிருவாகப் பணிப்பாளர் எம்.ஏ.ஜமால் முகம்மது தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பறக்கத் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஐ.ஏ.பரீட் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம பேச்சாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல்,விஞ்ஞானத்துறைத் தலைவர் கலாநிதி எம்.எம். பாஸில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார். நிகழ்வில் வர்த்தகர்களும்,நிறுவன ஊழியர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# அம்பாறை மாவட்டத்தில் பலத்த மழையுடனான காலநிலை பொத்துவில் பிரதேசத்தில் 65.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு





(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மவாட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக இம்மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. கனத்த மழையுன் பலத்த காற்றும் வீசி வருவதால், இம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

அதிக மழை காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட தாழ் நில விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளன. அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்செய்கைகள் பலவற்றுக்கு பாரிய தேசங்கள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் வீசி வரும் பலத்த காற்று காரணமாக சில பிரதேசங்களில் இருந்த பெரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், காற்றின் வேகத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாத மரங்கள் சிலவும் அடியோடு சரிந்து வீழ்ந்தும் உள்ளள. அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பிரதான வீதி அருகே இருந்த பெரு மரமொன்று நேற்று(03) அதிகாலை 3 மணியளவில் சரிந்து விழுந்ததனால் சில மணி நேரம் பிரதான வீதியின் போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. அத்தோடு இம்மரம் மின்கம்பிகளில் வீழ்ந்ததனால் குறித்த பிரதேசத்தில் மின் துண்டிக்கப்பட்டிருந்தது.

இம்மாவட்டத்தின் கடற் பரப்பில் பலத்த காற்றுடனான மழை பெய்து வருவதனால் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இதன் காரணமாக இம்மாவட்டத்தில் கடற்றொழில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. பலத்த மழையினால் உப உணவுப் பயிர்ச் செய்கைகளுக்கும் பாரிய பாதிப்பேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 24 மணி நேரத்தில் இம்மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் 65.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பகுதியில் 65.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளது. றூபஸ் குளம் பிரதேசத்தில் 56.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், லகுகல பிரதேசத்தில் 51.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், எக்கல் ஓயா பிரதேசத்தில் 43.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பாணம பிரதேசத்தில் 39.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், சாகாமம் பிரதேசத்தில் 33.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் 27.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவிக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் மாலை வேளைகளில் வீசுகின்ற பலத்த காற்றின் காரணமாக சில பிரதேசங்களில் கடல் அலை சுமார் பத்தடிக்கு மேல் உயர்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வை கொண்டாட வடக்கு - கிழக்கு மக்கள் தயார்!



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு நாளை இடம்பெறவுள்ள நிலையில் சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு கிழக்கு மக்கள் தயாராகி வருகின்றனர்.

கல்முனை நகரில் அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்களின் வீடுகள் மற்றும் வாகனங்களிலும் இலங்கையின் தேசியக் கொடியைப் பறக்கவிட்டு மக்கள் சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

சந்தையில் குறைந்த விலைகளில் தேசியக்கொடி விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, போன்ற பிரதேசங்களிலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பொது மக்கள் எனப் பலரும் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.










# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சிப் பேரணி

























